**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.II, திண்டுக்கல்**
**முன்னிலை. திரு.தினேஷ்குமார், B.A.L.L.B. (HONS).L.L.M.,**
**நீதித்துறை நடுவர் எண்.II, திண்டுக்கல்**
**2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ம் நாள் திங்கட்கிழமை**
**குற்றவியல் பல்வகை மனு எண்.3820/2019**
**in**
**CC. No.280/2013**

K.அக்கம்மாள் (வயது 62/2019)
த/பெ.கண்ணன்,
கூட்டுறவு நகர்,
திண்டுக்கல்.

... மனுதாரர்/ 5 ம் எதிரி

/Vs/

காவல் ஆய்வாளர்,
நகர் வடக்கு காவல்நிலையம்,
குற்ற எண்.163/2013
சட்டப்பிரிவுகள் 147, 353, 506(i) இதச

.... முறையீட்டாளர்

இம்மனுவானது மனுதாரர் /5 ம் எதிரி தரப்பில் கு.வி.மு.ச. பிரிவு 239 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு, 15.04.2019 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.சலீம், M.A., B.L., அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை.2 முன்னிலை ஆகியும், ஆவணங்களைப் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

## <u>உத்தரவு</u>

## <u>I மனுவின் சுருக்கம்</u>

1. இம்மனுதாரர் மனுதாரர்/5ம் எதிரி மீது திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலைய குற்ற எண். 163/2013 சட்டப்பிரிவு 147, 353, 506(i) இதச வின் படி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மேலும், மனுதாரர் அவரது மனுவில் இவ்வழக்கின் புகார்தாரர் திண்டுக்கல் தாலுகா காவல் நிலைய குற்ற எண்.77/2013ன் கீழ் இம்மனுதாரர் மீது வழக்கு பதிவு செய்ததாகவும், அதில் பிணையில் சென்று பிணை நிபந்தனையாக கையெழுத்திட வந்ததாகவும், அப்போது புகார்தாரர் காவல் நிலையத்தில் இருந்த நடப்புத்தாள்களை பார்வையிட்டுக் கொண்டிருந்தபோது 9.30 மணிக்கு கையொப்பமிட வந்ததாகவும், அதற்கு புகார்தாரர் 10.00 மணிக்கு தான் கையொப்பமிட வேண்டும் என்று சொன்னதாகவும், 1ம் எதிரி ஏன் என்று கேட்டதாகவும், மற்ற எதிரிகள் புகார்தாரரை மிரட்டியதாகவும், நடப்புத்தாளை பார்க்கவிடாமல் பணி செய்யவிடாமல் இருந்ததாகக் கூறி எதிரிகள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

3. மேலும், அந்த மனுவில் மனுதாரர்/ 5ம் எதிரிக்கு எதிராக எந்தவிதமான தனிப்பட்ட குற்றச்சாட்டும் குற்ற இறுதியறிக்கையில் இல்லை என்றும், புகார்தாரர் கூறியுள்ளது போல் எந்தவிதமான குற்றச் செயலிலும் மனுதாரர்/ 5ம் எதிரி ஈடுபடவில்லை என்றும், இவ்வழக்கின் சாட்சிகள்

அனைவரும் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் என்றும், காவல் நிலையத்தில் சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் தேதியின் வீடியோ ஆதாரங்கள் ஏதும் நீதிமன்றத்தில் சமர்பிக்கவில்லை என்றும், அதனால் மனுதாரர்/ 5ம் எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுவிக்கக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**II அரசு தரப்பு எதிருரை:**

5. அரசு தரப்பில் போதிய கால அவகாசம் கொடுத்தும் எதிருரை தாக்கல் செய்யவில்லை. ஆனால் விசாரணையில்போது அரசு தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை.2 முன்னிலையாகி தனது எதிருரையை வாய்மொழியாக தெரிவித்து, அதில் இம்மனுதாரர் / 5ம் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் உள்ளது என்றும், தற்போது முகாந்திரம் இல்லை என்று இந்த நிலையில் வழக்கிலிருந்து விடுவிக்க முடியாது என்றும், மனுதாரர் /5ம் எதிரியின் குற்றச்செயலைப் பொறுத்து வழக்கின் விசாரணை முடிவுற்ற பின்பு தான் தெரியவரும் என்பதால் இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டுமென்று வாதிட்டார்.

**III ஆய்வுக்குரிய பிரச்சனை**

6. இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கத்தக்கதா இல்லையா ? என்பதே ஆகும்.

**IV தீர்வு:**

7. இரு தரப்பு கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்ததின் அடிப்படையிலும், குற்ற இறுதி அறிக்கையுடன் சமர்ப்பித்த கு.வி.மு.ச.161(3) வாக்குமூலம் மற்றும் பிற ஆவணங்களை பரிசீலனை செய்ததில் புகார்தாரர் திண்டுக்கல் தாலுகா காவல் நிலைய குற்ற எண்.77/2013ன் கீழ் இம்மனுதாரர் மீது வழக்கு பதிவு செய்ததாகவும், அதில் பிணையில் சென்று பிணை நிபந்தனையாக கையெழுத்திட வந்ததாகவும், அப்போது புகார்தாரர் காவல் நிலையத்தில் இருந்த நடப்புத்தாள்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தபோது 9.30 மணிக்கு கையொப்பமிட வந்ததாகவும், அதற்கு புகார்தாரர் 10 மணிக்கு தான் கையொப்பமிட வேண்டும் என்று சொன்னதாகவும், 1ம் எதிரி ஏன் என்று கேட்டதாகவும், மற்ற எதிரிகள் புகார்தாரரை மிரட்டியதாகவும், நடப்புத்தாளை பார்க்கவிடாமல் பணி செய்யவிடாமல் இருந்ததாகக் கூறி எதிரிகள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது. ஆனால், மனுதாரர்/5ம் எதிரி மேற்படி குற்றச் செயலில் ஈடுபட்டாரா? இல்லையா? என்பது வழக்கின் விசாரணையின் மூலமே தெரிய வரும் என்பதாலும், இந்நிலையில் அவரின் குற்றத்தைப் பொறுத்து விசாரணைக்கு முன்பாக குற்றவாளி இல்லை என கருத இயலாது என்றும், அது Mini Trial ஆக கருதப்படும் என்பதால் நீதியின் நலனுக்காக இம்மனுவை தள்ளுபடி செய்வதே உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் அலுவலக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் திங்கட்கிழமை 27 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.04.27 17:00:09 +0530

நீதித்துறை நடுவர் எண்.II
திண்டுக்கல்.